[1978 செப்டம்பர் 11

சென்னை மாநகராட்சியில் நிலவரி நிலுவை

*வினா எண் 129—திரு. கே. பண்ணை சேதுராம்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) சென்னை மாநகராட்சியிலிருந்து பத்து பசலி ஆண்டுகளுக்கும் மேலாக நிலவரி ரூ. 2.85 லட்சம் வர வேண்டுமென்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் என்றால், அதை வசூலிக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: (அ) ஆம்

(ஆ) சென்னை மாநகராட்சி அரசுக்குச் செலுத்த வேண்டிய பாக்கி கணக்கிடப்பட்டு வருகிறது. அதற்காக 10-7-1978 அன்று அங்கே உள்ளவர்கள் எல்லாம் கூடிப் பேசி ரூ. 2 லட்சம் முன் பணமாக கொடுக்கவேண்டும் என்று முடிவு எடுக்கப்பட்டு இருக்கிறது. அவர்களும் செலுத்தி இருப்பார்கள் என்று கருதுகிறேன். அதைப் பற்றி மற்றவைகளை எல்லாம் ஆராய்ந்து, எவ்வளவு வர வேண்டும் என்பதைக் கணக்கிட்டு, அரசுக்கு வர வேண்டிய பணத்தை நிச்சயமாக வசூல் செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. பண்ணை சேதுராம்: தலைவரவர்களே, சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான காலி இடங்களில் வீட்டு மனை இடங்கள் அதிகமாக இருக்கின்றன. அதற்குரிய நில வரியை அரசுக்குச் செலுத்தாமல் மாநகராட்சி கடந்த 10 ஆண்டுக் காலமாக இருந்து வருகிறது. ஆகவே, அந்த இடங்களைக் கைப்பற்றி வீடு இல்லாதவர்களுக்கும், நிலம் இல்லாதவர்களுக்கும் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, இந்தக் கேள்விக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை. என்றாலும், மாநகராட்சி மூலம் அரசுக்கு எவ்வளவு நிலம் இருக்கிறது, எவ்வளவு வீடு கட்டியிருக்கிறார்கள், எவ்வளவு மனை காலியிருக்கிறது என்பதற்குத் தனியாகக்கேள்வி கேட்டால் அதற்குப் பதில் சொல்ல முடியும். எப்படியிருந்தாலும், அரசு அவற்றை ஆராய்ந்து, அரசுக்கு வர வேண்டிய பணத்தை வசூல் செய்யத் தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பொ. விஜயராகவன்: தலைவரவர்களே, மாநகராட்சியிலிருந்து வர வேண்டிய நிலவரியைப் பொறுத்தவரையில் இரண்டு இலட்சம் ரூபாய் வர வேண்டியதிருப்பதாகவும் அது கிடைத்து விடும் என்றும் மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதுபற்றி மாநகராட்சியைக் கேட்டபோது அவர்கள் என்ன பதில் கொடுத்திருக்கிறார்கள் என்பதை அறிவிப்பார்களா?

1978 செப்டம்பர் 11]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே. அவர்கள் தருவதாக ஒப்புக்கொண்டதாக பதில் இன்னும் வரவில்லை.

திரு. ரா. உமாநாத்: தலைவரவர்களே, சாதாரண ஜனங்கள் இடத்தில் இப்படி வரி பாக்கியிருந்தால் ஜப்தி நடவடிக்கைகள் எல்லாம் எடுக்கிறார்கள். இந்த பாக்கி 10 வருஷமாக இருக்கிறது. இப்படி 10 வருஷமாக விட்டு வைத்திருப்பதற்கு எந்த அதிகாரி காரணம்? அதற்கு எந்தச் சர்க்கார் பொறுப்பு? ஏன் இப்படி 10 வருஷமாக விட்டுவைக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டது?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, 10 வருஷம் ஏன் விட்டு வைத்தார்கள், யார் பொறுப்பு என்று கேட்கிறார்கள். அதிகாரிகள் இப்போது பல்வேறு இடங்களில் இருக்கிறார்கள்; சென்னையிலும் இருக்கிறார்கள். இருந்தாலும் இப்படி எதிர்காலத்தில் நடக்கக் கூடாது என்று சொல்லப் பட்டிருக்கிறது. அவர்களுடைய குற்றம் பெரிதாக இருந்தால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் கட்டிடம்.

* வினா எண் 130—திரு. கே. சௌந்திரராசன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

திருச்சியில் உள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு புதிய கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: ரூ. 41.85 இலட்சம் மதிப்பீட்டில் திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு புதிய கட்டிடம் கட்ட வருவாய் வாரியம் அனுப்பியுள்ள செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. செ. சதாசிவம் : தலைவரவர்களே, இந்தச் செயற் குறிப்பை உடனடியாகப் பரிசீலித்து, விரைவில் கட்டடத்தைக் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, புதிதாக வருவாய்த் துறையில் கட்டடம் கட்ட ஆண்டுதோறும் அரசுக்குக் குறிப்பு அனுப்பப்படுகிறது. வருவாய்த் துறைக்கு எவ்வளவு பணம் ஒதுக்குகிறார்களோ அதைப் பொறுத்து, எந்த எந்த இந்த இடத்தில் உடனயாகக் கட்டடம் கட்ட வேண்டிய தேவை இருக்கிறதோ அதை உத்தேசித்து கட்டடம் கட்ட அரசு முயற்சி செய்யும்.